Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 15 வியாழக்கிழமை (29.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 122

# வான் புலிகள் பிரச்சினையை அரசு 'சார்க்' மாநாட்டில் எழுப்ப முடிவு

## பிராந்தியத்துக்கே ஆபத்து என்பதை வலியுறுத்திப் பிரசாரப்படுத்தத் திட்டம்

கொழும்பு, மார்ச் 29

**விடுதலைப்புலிகள் விமானப்படை ஒன்றை உருவாக்கியிருக்கின்றமையால் தெற்காசியப் பிராந்தியத்துக்கே பேராபத்து ஏற்பட்டுள்ளது என்ற விடயத்தை நாளை தொடக்கம் அடுத்த புதன்கிழமை வரை புதுடில்லியில் நடைபெறவிருக்கும் தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்புக் கவுன்ஸிலின் (சார்க்) மாநாட்டில் வலியுறுத்த இலங்கை அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.**

**இந்த மாநாட்டில் இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றும் பிரதான உரையிலும் இந்த விடயம் வலியுறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

'சார்க்' நாடுகளின் வெளியுறவுச் செயலர்கள் மட்டக்கூட்டம் நாளையும் மறுதினமும் புதுடில்லியில் நடைபெறுகின்றது. 'சார்க்' வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பு அதற்கு அடுத்த இரு நாள்களும் (ஏப்ரல் முதலாம், இரண்டாம் திகதிகளில்) இடம்பெறும்.

அதற்கு அடுத்த இரு நாள்களும் - அதாவது ஏப்ரல் 3, 4ஆம் திகதிகளில் - சார்க் நாடுகளின் தலைவர்கள் பங்கு பற்றும் உச்சி மாநாடு நடைபெறுகின்றது.

விடுதலைப்புலிகளின் விமானப் படையினால் இந்தப் பிராந்தியத்துக்கே பேராபத்து என்று கருதும் இலங்கை அரசு, அது

(04 பக்கம் பார்க்க)

## கிழக்கில் புதிய படை நடவடிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 29

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி - பதுளை வீதியை அண்டியுள்ள பிரதேசங்களில் புதிய இராணுவ நடவடிக்கையொன்றை படையினர் நேற்று ஆரம்பித்துள்ளனர். செங்கலடி - பதுளை வீதியை அண்டியுள்ள தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகள் கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்ட படை முகாம்கள் மீது ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் இந்தத் தாக்குதல்களைத் தடுத்துநிறுத்தி, அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைக் கைப்பற்றும் நோக்கத்துடன் இராணுவ நடவடிக்கை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(04பக்கம் பார்க்க)

## கொக்கட்டிச்சோலைப் பகுதி தம்வசம் என்கிறது இராணுவம்

**கிழக்குவெற்றிகளில் மற்றொரு மைல்கல் என்று தெரிவிப்பு**

கொழும்பு, மார்ச் 29

கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தை அரசுப் படைகள் புதன்கிழமை கைப்பற்றிக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

கொக்கட்டிச்சோலையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த அரசுப்படைகள் அங்குள்ள விடுதலைப்புலிகளின் தளம் ஒன்றிலிருந்து பெருமளவு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும், நிலக்கண்ணிகளையும் கைப்பற்றியுள்ளன - என்று இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளின் பிடியில் இருக்கும் கிழக்குப் பிரதேசங்களில் முன்னேறிச் செல்லும் இராணுவத்தினர் ஈட்டியுள்ள வெற்றிகளில் மற்றொரு மைல்கல் இது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (சி)

## எட்டு இடங்களில் 'ராடர்'கள் பொருத்தி இந்திய விமானப்படை தீவிர கண்காணிப்பு

புதுடில்லி, மார்ச் 29

தென்னிந்திய வான் பிராந்தியத்தைக் கண்காணிப்பதற்காக இந்திய விமானப்படை தமிழ்நாட்டின் கரையோரத்தில் எட்டு ராடர் கருவிகளை உடனடியாகப் பொருத்தியிருக்கின்றது.

இலங்கையில் கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் முதல் முறையாக விமானத் தாக்குதல் நடத்தியிருப்பதைத் தொடர்ந்தே இந்திய விமானப் படை ராடர்களைப் பொருத்தி வான்வழி கண்காணிப்பை தீவிரப்படுத்தியிருக்கின்றது என்று பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

விமான நடமாட்டத்தைக் கண்காணிக்கும் இந்த எட்டு ராடர் கருவிகளும் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தில் சீனியப்பா தர்கா மற்றும் சுந்தரமுடையான் கிராமம் அருகே உள்ள சவுக்குக்காடு ப்குதிகளில் பொருத்தப்பட்

(04பக்கம் பார்க்க)

## காணாமற்போனோரின் உறவினர்கள் ஒன்றுகூடி நேற்றுச் சத்தியாக்கிரகம்

கொழும்பு, மார்ச் 29

கொழும்பு மற்றும் நாட்டின் பல பகுதிகளில் காணாமற்போனோரைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 11 மணிமுதல் மாலை 5 மணிவரை கொழும்பு 'ஹைட்பார்க்'கில் இடம்பெற்றது.

மக்கள் கண்காணிப்புக்குழு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. காணாமற்போனவர்களின் நூறுக்கும் மேற்பட்ட உறவினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

கொழும்பு, புத்தளம் மற்றும் வடக்கு - கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த காணாமற்போனவர்களின் உறவினர்கள் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு வருடங்களுக்கு மேல் காணாமற்போனவர்

(04 பக்கம் பார்க்க)

## மட்டு. - செங்கலடி வீதி தொடர்ந்து மூடப்பட்டுள்ளது

மட்டக்களப்பு, மார்ச் 29

செங்கலடி, கொம்மாதுறை இராணுவ முகாம்மீது நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) காலை மேற்கொள்ளப்பட்டதற்கொலைக் குண்டுத்தாக்குதலில் காயமடைந்த 10 பேர் மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த 5 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். பொதுமக்கள் 5 பேர் தொடர்ந்தும் மட்

(04 பக்கம் பார்க்க)

## தனியான ஒரு சம்பவத்தில் கரிசனை காட்டாமல் பிரச்சினையின் மூலகாரணத்தை நீக்க வேண்டும்

### புலிகளின் வான் தாக்குதல் குறித்து இந்திய வெளிவிவகாரச் செயலர்

புதுடில்லி, மார்ச் 29

அண்மைக்காலமாக இலங்கையில் வன்செயல்கள் அதிகரித்து வருவது குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது. விடுதலைப் புலிகள் இரண்டு நாள்களுக்கு முன்னர் நடத்திய வான் தாக்குதல், வன்செயல் அதிகரிப்புக்கு ஓர் உதாரணமாகும்.

இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன்.

அவர் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு சொன்னார்.

இலங்கையில் நிலவும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு என்ன செய்யலாம் என்பது குறித்து அங்குள்ள தரப்புகள் ஒவ்வொன்றுடனும் இந்தியா தொடர்பு கொண் டுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு அவர்கள் தமக்குள்ளே தீர்வு ஒன்றைக் கண்டாக வேண் டும் என்பதனை இந்தியா ஊக்குவித்து வருகின்றது. இனத் தகராறு காரணமாக அங்கு சீர்கெட்டுள்ள சூழலை அகற்றி நன்னிலைக்குக் கொண்டுவருவதற்குத் தன்னால் என்ன செய்ய முடியும்

(04 பக்கம் பார்க்க)

## 'ராடர்' சரியாக இயங்கவில்லையா? "அந்தக் கேள்விக்கே இடமில்லை"

புதுடில்லி, மார்ச் 29

இலங்கைக்கு இந்தியா வழங்கிய 'ராடர்' கருவி சரியாகச் செயற்படவில்லை; விடுதலைப்புலிகளின் விமானத்தை நோட்டம் காணவில்லை என்பதனை ஏற்க முடியாது - என்று இந்திய வெளிவிவகாரச் செயலாளர் தெரிவித்தார்.

அவர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் 'ராடர்' குறித்து கேட்கப்பட்டதற்கு-

(04 பக்கம் பார்க்க)

## தமிழகத்துக்குள் புலிகள் ஊடுருவலைத் தடுக்க 37பொலிஸ் விசேட படைப் பிரிவுகள்

### தென்பிராந்திய பொலிஸ் மா அதிபர் தகவல்

சென்னை, மார்ச் 29

இலங்கையில் தற்போது நடந்துவரும் மோதல்கள் காரணமாக விடுதலைப் புலிகள் தமிழகத்திற்குள் ஊடுருவாது தடுப்பதற்காக பொலிஸ் பகுதியில் 37 விசேட படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை கடலோர மாவட்டங்களில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுவருகின்றன. இத்தகவலை தென் பிராந்திய பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ் குமார் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இராமநாதபுரத்தில் 16 பிரிவுகள், தூத்துக்குடி மாவட்டத்தில் 21பிரிவுகள் என்று மொத்தம் 37 பொலிஸ் விசேட பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த விசேட பிரிவி

(04 பக்கம் பார்க்க)

## கடும் வான் தாக்கு; ஷெல் வீச்சு! கிழக்கில் மோதல்கள் தீவிரம்

மட்டக்களப்பு, மார்ச் 29

செங்கலடி - கறுத்தப்பாலம் இராணுவ முன்னரங்க சோதனைச்சாவடி மீது நேற்றுமுன்தினம் இரவு புலிகள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் படைச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து படையினரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். இந் தப் பதில் தாக்குதலினால் புலிகளுக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை, புலிகளின் தளங்கள் மீது நேற்று புதன் கிழமை நண்பகல் வேளையில் விமானப்படையின் கிபிர்

(04 பக்கம் பார்க்க)

## ஓமந்தை நோக்கி ஷெல் தாக்குதல்

வவுனியா, மார்ச் 29

வவுனியாவில் இருந்து ஓமந்தையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி நேற்று மாலை ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆட்லறி மற்றும் பல்குழல் ஷெல் தாக்குதல்கள் சுமார் அரைமணி நேரம் நடத்தப்பட்டன. சேதவிவரம் தெரியவரவில்லை. (அ)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லையா நாகரத்தினம் அவர்களின் மகத்தான வங்கிச் சேவை



இலங்கை வங்கியில் 38 ஆண்டுகள் பல பதவிகளைப் புகழ்பெற வகித்த உரும்பிராய்

**செல்லையா நாகரத்தினம்**

அவர்கள் ஈற்றில் சுன்னாகம் இலங்கை வங்கியில் முகாமையாளர் பதவியினை அலங்கரித்து 27.03.2007 இல் ஓய்வுபெற்றுள்ளார்.

செல்லையா நாகரத்தினம் அவர்கள் தமது குடும்பத்தினருடன் நாடு நலம்பெற மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சிறக்க அருளும் வண்ணம் எல்லாம் வல்ல கருணாகரப்பிள்ளையாரின் திருவடிகளை மனதில் இருத்திப் பிரார்த்திப்போமாக.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரமும் குடும்பத்தினரும்.

உரும்பிராய். (59144)

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
## நீர்க்கட்டண அறவீடு மாற்றம் பற்றிய அறிவித்தல்

எதிர்வரும் 2007.04.01ஆம் திகதி தொடக்கம் 1 - 5 வரையான அலகுகளுக்கான நீர்க்கட்டணம் பின்வருமாறு மாற்றப்பட்டு அறவிடப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

| இல. | வர்க்கம் | ஓர் அலகு (1000 லீற்) | மாற்றப்பட்டுள்ள நீர்க்கட்டணம் |
|---|---|---|---|
| 01. | அ. வீட்டுப்பாவனை | 01 - 05 | ரூபா 200/- |
| | ஆ. மத ஸ்தாபனம் | 01 - 05 | ரூபா 200/- |
| 02. | போதனா வைத்தியசாலை | 01 - 05 | ரூபா 300/- |
| 03. | அரச நிறுவனங்கள் | 01 - 05 | ரூபா 300/- |

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். (A-50877)

மு.செ. சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

## நினைவலைகள்

**இரண்டு வருடங்கள்** — **30 மாதங்கள்**

மண்ணகம் 23.01.1926 — விண்ணகம் 29.03.2005



அமரர் க.வேலாயுதபிள்ளை
(ஓய்வூதியர் இ.மி.ச.)

மண்ணகம் 01.11.1939 — விண்ணகம் 19.09.2004



திருமதி
வே.கனகம்மா

பிள்ளைகள் வாழ்வுக்காய் வாழ்ந்த எம் பெற்றோரை
என்னளவும் இரக்கமின்றிக் காலன் கவர்ந்தானோ.

வே.சிவகுமாரன் (மகன்),
எழுதுவினைஞர்,
யாழ். பல்கலைக்கழகம். (59118)

தகவல்:
குடும்பத்தினர்.
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

869 நீலம்

வெற்றி இலக்கங்கள்

**03 21 47 51**

கடகம்

27-03-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4939001 - 4954616

ஜக்பொட் பரிசு ரூபா.1,748,300/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 341,470 | 10/- | 3,414,700/- |
| 2 இலக்கங்கள் | 31,396 | 20/- | 627,920/- |
| 1 இல. + லக்கினம் | 31,176 | 30/- | 935,280/- |
| 2 இல. + லக்கினம் | 2,835 | 100/- | 283,500/- |
| 3 இலக்கங்கள் | 828 | 500/- | 414,000/- |
| 3 இல. + லக்கினம் | 85 | 5,000/- | 425,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,748,300/- | 1,748,300/- |
| மொத்தம் | | | 8,248,700/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 407,800 | | 9,272,200/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5822713 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 மார்ச் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 4953547-3-58 |
| கொழும்பு | 4954148-2-98 |
| கேகாலை | 4947517-4-73 |
| காலி | 4944910-4-02 |
| குருநாகல் | 4939497-1-12 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



## Spoken English & Grammar for School Students

Group Classes (A Crash Course).
O/L, A/L, English Medium Students
அச்சடித்த பாடங்கள், பயிற்சிகள்
காலம்: 2 வாரம் (தினசரி 2hrs. class)
ஆரம்பம்: 06.04.2007 (9 a.m.)
By: Mr. B. Ruban (A/L English Teacher & B.B.A.)
Jaffna Technical Institute (JTI)
No. 45, Clock Tower Road, Jaffna.
தொடர்: 0779785749.



## விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் கந்தோருக்கு அருகில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0112562559, 0777571767.


## தவறிவிட்டது

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த இராசலிங்கம் தங்கராணியின் தேசிய அ. அட்டை (இல. 457992670V) 23.03.2007 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.


## திருமண சேவை

தமிழ் மக்களின் சகல சமூக - கிறிஸ்தவ - இந்து சமய மக்களுக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் இணைப்பகம்.
கிறிஸ்தவ பாரம்பரியமான இளவாலையில் இந்து மக்கள் ஜாதகங்களும் ஏற்கப்படும். செயலக நாள்கள் - வெள்ளி தொடக்கம் திங்கள் வரை காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணிவரை
புனித சூசையப்பர் சர்வதேச திருமண சேவை,
சந்தை வீதி, இளவாலை.



## காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்தியில் வர்த்தக மையத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779 596658.



## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, பிரதான வீதியில்,
4 3/4 பரப்புக்காணி வீட்டுடன்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே. 094-11-4949234
மின்னஞ்சல்: jeeva66ss@yahoo.com



## கப்பல், விமான பொதிகள் சேவை

கொழும்பு - யாழ்ப்பாணம்

உடனடி கப்பல், விமான பொதிகள் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பத்துக் கிலோவிற்கு (10Kg) மேற்பட்ட பொதிகளே ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு கொள்ளவும் : 0773846998



புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna

**Diploma in Hardware Engineering**
◆ Assembling ◆ Upgrading ◆ Troubleshooting ◆ Fault Finding ◆ Repairing ◆ Servicing ◆ Software Installation ◆ Configuring ◆ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
◆ Introduction to Computer ◆ Operating System(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Adobe Premier ◆ Cool3D Studio ◆ Pinnacle Studio ◆ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
◆ Introduction to Computer ◆ Operating System(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Corel Draw ◆ Cool3D Studio ◆ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 02/04/2007 - 09.00

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
Batch I : 30/03/2007 , Batch II : 31/03/2007
Batch III : 01/04/2007 , Batch IV : 04/04/2007

3 மாதகால Diploma in Computerized Accounting புதிய பிரிவுகள் 31/03/2007, 01/04/2007, 02/04/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய நிர்வாக சபையின் மூத்த உறுப்பினர் செ. இரத்தினப் பிரகாசம் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி நகுலேஸ்வரி இரத்தினப்பிரகாசம்**

அவர்கள் 26.3.2007 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

நிர்வாக சபை,
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்,
கொக்குவில்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 17.07.1939 — உதிர்வு 27.02.2007



அமரர்

**முருகேசு தெய்வேந்திரம்**

கடந்த 27.02.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.03.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

3ஆம்ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (59143)

தகவல்:
குடும்பத்தினர்.

## நெஞ்சகலா நினைவலைகள்



திருமதி
**பரிமளகாந்தி நாகரட்ணம்**
திதி: ஏகாதசி 29.03.2007

அன்னைக்கு அன்னையாய்
ஆருயிர்த் தந்தையாய் தன்னைக்
கரைத்து எமது உயர்வுக்காய்
தன்னை அர்ப்பணித்த எம்
குலதெய்வமே நீங்கள் எம்மைப் பிரிந்து
ஆறு ஆண்டும் ஆகிற்றோ......

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை.

இ. தர்மதேவி (மகள்).

## 45ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் இராசதுரை
**தவனேந்திரன் (நேசன்)**
தோற்றம்: 02 . 02 . 1981
மறைவு: 13 . 02 . 2007

காலத்தால் காவியமானவரே
வாழ வழிதந்த எங்கள் குல விளக்கே
இன்று தாங்களில்லா வாழ்வதனால்
ஈரவிழிகளுடன் ஏங்கி நிற்கின்றோம்.

இன்று (29.03.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

நாவற்குழி கிழக்கு,
கைதடி. (59129)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசா நாகம்மா



மீசாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா நாகம்மா 25.03.2007 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அமரர் இராசாவின் (இளைப்பாறிய இ.போ.ச. நடத்துநர், கோண்டாவில்) அன்பு மனைவியும், அமரர் சிறிதரன், ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஜெயக்குமார் (கனடா), உதயகுமார் (சிறீ ஸ்ரோர்ஸ் - மீசாலை), சந்திரகுமார் (டென்மார்க்), கலாவதி (கனடா), சிறீவதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் பாலரூபி (சுவிஸ்), கீதாஞ்சலி (கனடா), செல்வநாயகி, லுசிதா (டென்மார்க்), சிவனேசன் (கனடா), சிறிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பரமேஸ்வரி (இத்தாலி), பராசக்தி (பிரான்ஸ்), அமரர் கைலாயபிள்ளை, பரமசாமி (ஜேர்மனி), அமரர் பாலசிங்கம், பவளம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் கதிரவேலு, அமரர் செல்லத்துரை, சரஸ்வதி, ஞானாம்பிகை, கலா, இராசரத்தினம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் அனுசியா, ஜெனிசியா, ஆகாஸ், நிகிஷா, சாயினா, ருசானி, தஜீவ், தர்சாயினி, டிலச்சன், ஜெனிக்கா, ஜெனோசன், நேருஜா, ஜெனோஜா, சாருஜா, தச்சா, சியாந் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.04.2007 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊர் எல்லைத்தெரு,
மீசாலை மேற்கு,
மீசாலை. (59134)

தகவல்:
இ. உதயகுமார்
(மகன் - சிறீ ஸ்ரோர்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## உதட்டளவில் அல்ல, உள்ளத்தளவில் பேச்சுக்கான அர்ப்பணிப்பு அவசியம்

விடுதலைப்புலிகளோடு சமாதானப்பேச்சுகளை நாளை நடத்தவும் அரசு தயாராக இருக்கின்றது என வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம தெரிவித்திருக்கின்றார்.

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீதான - வான் புலிகளின் - முதல் விமானத்தாக்குதல் நடைபெற்று அடுத்தநாள் இந்தஅறிவிப்பை இலங்கை வெளிவிவகார அமைச்சர் விடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

*''பரந்த - பயனுள்ள - அமைதியை ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். இதற்காகப் பேச்சு நடத்த வேண்டும், எல்லா வழிகளிலும் முயற்சிக்க வேண்டும் என எமது அரசு நம்புகின்றது. பேச்சுக்குப் புலிகள் தயார் என்றால் நாளையே நாம் பேச்சை நடத்தலாம்.''* - என்ற சாரப்பட வெளிவிவகார அமைச்சர் கூறியிருக்கின்றார்.

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீதான வான் புலிகளின் தாக்குதலை அடுத்து, இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத்தலைமைகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தலைமை நாடான ஜேர்மன் ஆகியவற்றின் இலங்கைத் தூதுவர்களையும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவரையும் சந்தித்துப் பேசிய பின்னரே, 'நாளையே அமைதிப் பேச்சுக்கு அரசு தயார்!' என்ற தகவலை வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால் அவர் விருப்பப்படி - அவர் குறிப்பிட்டவாறு - நாளையே அமைதிப் பேச்சுகளை ஆரம்பிக்க முடியாதிருப்பதற்கு - இடைஞ்சலாக இருக்கின்ற - காரணம் என்னவென்பது அவரது வார்த்தைகளிலேயே தொக்கி நிற்பதுதான் கவனிக்கத்தக்கது.

''நாம் பேச்சு நடத்தவேண்டியுள்ளோம், எல்லா வழிகளையும் முயற்சிக்க வேண்டியுள்ளோம் என்பதே எமது அரசின் எண்ணமாகும்.'' ("Our government belives that we need to talk, we need to explore all avenues") - என்றுதான் வெளிவிவகார அமைச்சர் கூறியிருக்கிறார்.

அங்குதான் தவறு இருக்கின்றது.

அமைதி முயற்சிகளில் - சமாதான நடவடிக்கைகளில் - ஈடுபடுவதானால் அதில் இதய சுத்தியுடனும், முழு முனைப்புடனும் பங்குபற்ற வேண்டும். அப்போதுதான் அவை பலனளிப்பவையாக - பயன் தருகின்ற செயற்பாடாக - அமையும். ஒருபுறம் பெயருக்கு சமாதான முயற்சிகள், அமைதிப் பேச்சுகள் என்று கூறிக்கொண்டு மறுபுறம் இராணுவ வெறித்தனம் மிக்க யுத்தப் பேரெடுப்பை மேற்கொள்வதால், இரண்டுமே குழம்பிப் போகும் என்பதுதான் நிலைமை. அத்தகைய எத்தனம் இரு தோணிகளில் கால்வைத்த வேலையாகிவிடும்.

மஹிந்தரின் அரசு அப்படித்தான் நடந்துகொள்கின்றது என்பதே வேதனைக்குரியது. அமைதிப் பேச்சுகளுக்கான சூழலை உருவாக்கித்தந்த யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்து, மேலாண்மைத் திமிரோடும் போர்வெறிப் போக்கோடும் படை நடவடிக்கைகளையும், நகர்வுகளையும் முன்னெடுத்து, அமைதிக்கான சகல வாய்ப்புகளையும் சிதறடித்து, எந்நேரத்திலும் கொடும்போர் வெடிக்கலாம் என்ற ஆபத்து ஏதுநிலையை இந்த அரசின் கையாள்கை உருவாக்கி நிற்கின்றது.

அந்தப் பின்னணியில்தான் இலங்கை இனப் போரில் கிளர்ச்சித்தரப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனது விமானப்படையை முதன்முதலில் அறிமுகப்படுத்தும் கட்டத்துக்கு நிலைமை போயிருக்கின்றது.

''எல்லா வழிகளையும் அரசு நாடவேண்டிய தேவை உள்ளது'' ("We ( government) need to explore all avenues")என்று வெளிவிவகார அமைச்சர் இப்போது குறிப்பிடும் போக்கே இந்த இக்கட்டு நிலையை - சமாதான முயற்சிகளின் இடைத் தேக்கத்தை - கொண்டு வந்திருக்கின்றது என்பது வெள்ளிடைமலை.

''சமாதானம் என்றால் சமாதானம்; போர் என்றால் போர்'' - என்று எண்பதுகளில் தமிழர்களைப் பார்த்துத் தென்னிலங்கைத் தலைமை அறைகூவல் விடுத்தது. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அப்போதைய மமதைப் பேச்சு சிறுபான்மையினரான தமிழர் தரப்பால் மறக்கற்பாலதல்ல.

அதையே இப்போது பதிலாகக் கூறவேண்டிய நிலைமை தமிழர் தரப்புக்கு உருவாகியிருப்பதும் வரலாற்றுக் கட்டாயமாகியிருக்கின்றது.

''அமைதி முயற்சி என்றால் அமைதி முயற்சி; போர் என்றால் போர்! இதில் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். அதில் தீவிரத்துடனும் இதயசுத்தியுடனும் ஈடுபடுங்கள். இனப்பிரச்சினைக்கு, 'பல தோணிகளில் கால் வைப்பதுபோல' பல வழிகளிலும் தீர்வு காண முயற்சிப்பது அர்த்தமற்றது; அபத்தமானது. அமைதித் தீர்வும் இராணுவத் தீர்வும் ஏக காலத்தில் முன்னெடுக்கப்படக்கூடியவையே அல்ல. அப்படி ஏக காலத்தில் முன்னெடுப்பது இரண்டு வகை முயற்சிகளையுமே அடியோடு பாதிக்கும்.'' - என்ற யதார்த்தத்தை தென்னிலங்கை அரசுத் தலைமைக்குச் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாயம் தமிழர் தரப்புக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே, ''நாளையே பேச்சை நடத்தத் தயார்! '' - என்று அறிவிப்பதற்கு முன்னர் -

''இராணுவத் தீர்வு அணுகுமுறைச் சிந்தனையை இன்றே அடியோடு தலைமுழுகி விட்டோம்!'' - என்று அறிவிக்கவும், அதை இதயசுத்தியோடு செயற்படுத்தி, வெளிப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் அரசுத் தரப்பு முன்வரவேண்டும்.

அவ்வாறு முன்வந்து நடந்து கொண்டால்தான், நாளையே அமைதிப் பேச்சை நடத்தத் தயார் என்ற அதன் அறிவிப்பில் அர்த்தம் இருக்கும்.

யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு முரணாகப் பெரும் இராணுவ முன் நகர்வுகளையும், படையெடுப்புக்களையும் மேற்கொண்டு, தமிழர் தாயகப் பிரதேசங்களைப் புதிது புதிதாக ஆக்கிரமித்தபடி, நாளையே அமைதிப் பேச்சுகளை ஆரம்பிக்கலாம் எனக் கனவு காண்பதோ, அத்தகைய நம்பிக்கையை - நப்பாசையை - சர்வதேச சமூகத்துக்கு உண்டாக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு, அழைப்பு விடுவதிலோ எந்தப் பலனும் கிட்டப்போவதில்லை.

ஆகவே அமைதிப் பேச்சுக்கான ஈடுபாடு உதட்டளவில் இல்லாமல் உள்ளத்தளவில் - செயலளவில் - வெளிப்படவேண்டியது அவசியம்.

## அதிகாலையில் மண் ஏற்றிவந்த வாகனம் மீது சூடு; சாரதி காயம்!

உடுப்பிட்டி, மார்ச் 29

வடமராட்சி - மாலிசந்திப் பகுதியில் சட்டவிரோதமாக மண் ஏற்றிவந்ததாகச் சொல்லப்படும் ஹண்டர் வ்ான் மீது, இனந்தெரியாத ஆயுததாரிகள் சுட்டதில் வாகனச்சாரதி படுகாயமடைந்தார். அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 4.15மணியளவில் நடைபெற்ற இந்தச் சூட்டுச் சம்பவத்தில் தில்லையம்புலம், துன்னாலை தெற்கைச்சேர்ந்த பாலகிருஷண்ன் நிரஞ்சன் என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

குறிப்பிட்ட நபர் வல்லிபுரக் கோயில் பகுதியில் இருந்து மண் ஏற்றிக்கொண்டு வந்த வேளை மாலிசந்திப் பகுதியில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று சொல்லப்படுகிறது. வாகனம் நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-4-155)

## தனியார் மருந்தகங்களுக்கு மருந்து விநியோகிக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மருந்தகத்திற்கு கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டில் ஒரு தொகுதி மருந்து வகைகள் தருவிக்கப்பட்டுள்ளன.

மருந்துகள் தேவைப்படும் மருந்தகங்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகள் தமது பகுதிப் பிரதேச செயலரின் சிபார்சுடன்பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு விண்ணப்பித்து அனுமதியைப் பெறமுடியும். அனுமதி கிடைத்தவர்கள் யாழ். ப.நோ.கூ. சங்க மருந்தகத்தில் மருந்துகளைப் பெற்று நோயாளர்களுக்கு விநியோகிக்கலாம். யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் இத் தகவலைத் தெரிவித்தார். (அ-1-202)

## புலிகளுடன் நாளைக்கு என்றாலும் பேச்சு நடத்துவதற்கு அரசு தயார்!

### வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நாளை நடத்தவும் அரசு தயாராக இருக்கின்றது.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்திருக்கிறார்.

பரந்த - பயனுள்ள - அமைதியை ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். இதற்காகப் பேச்சு நடத்த வேண்டும். எல்லா வழிகளிலும் முயற்சிக்க வேண்டும் என அரசு நம்புகின்றது - என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கட்டுநாயக்க விமானப் படைத் தளம் மீது விடுதலைப் புலிகளின் முதலாவது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டு அடுத்த நாள் இந்த அறிவிப்பை செய்தியாளர்களிடம் விடுத்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர்.

கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மீதான தாக்குதலை அடுத்து இலங்கைக்கு உதவும் இணைத் தலைமைகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தலைமை நாடான ஜேர்மனி ஆகியனவற்றின் தூதர்களோடு பேச்சு நடத்திய பிறகே வெளிவிவகார அமைச்சர் புலிகளைப் பேச்சுக்கு அழைக்கும் இந்த அழைப்பை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க முடியாத

## சர்வதேச நாடுகளுக்கு வான்புலிகளின் தாக்குதலைக் கண்டிக்கத் தகுதி இல்லை

### பழ.நெடுமாறன் அறிக்கை

சென்னை, மார்ச் 29

இலங்கை இராணுவம் தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருவதை சர்வதேச நாடுகளுக்கு விடுதலைப்புலிகள் சுட்டிக்காட்டி வந்தனர். ஆனால் அது குறித்து எந்தப் பயனும் இல்லை. இந்த நிலையில் வான் புலிகள் நடத்தியிருக்கக் கூடிய வெற்றிகரமான தாக்குதலைக் கண்டிக்கவோ குறை கூறவோ யாருக்கும் தகுதி இல்லை.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் நடைபெற்று வரும் போரில் முதல் தடவையாக வான் புலிப்படையைச் சேர்ந்த இரு விமானங்கள் பறந்துசென்று தலைநகரமான கொழும்பில் உள்ள சிங்கள விமானப்படையைச் சேர்ந்த கட்டுநாயக்கா விமானத் தளத்தைத் தாக்கி கடும்சேதம் விளைவித்துவிட்டு பத்திரமாகத் திரும்பியுள்ளன என்ற செய்தி உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் வலிமை ஒருபோதும் குறையவில்லை. முன்னிலும் அதிகமாயிருக்கிறது என்பதை இப்போதாவது உணர்ந்து சர்வதேச நாடுகள் குறிப்பாக இந்தியா, சிங்கள அரசை கண்டிக்கவும் இனப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தவும் முன்வர வேண்டும். - என்று உள்ளது. (அ-சி)

## சந்தேகத்திற்கிடமான விமானங்களை அவதானித்தால் தகவல் தர வேண்டும்!

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் எந்தப் பாகத்திலும் சந்தேகத்திற்கிடமான முறையில் விமானங்கள் பறப்பதை மக்கள் அவதானித்தால் அதுகுறித்து உடனடியாக 116 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டார்.

''கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது விடுதலைப் புலிகளின் விமா னங்கள் தாக்குதல் நடத்துவதற்குச் சிறிதுநேரத்துக்கு முன்னர், குருநாகல் மாவட்டம் பிங்கிரிய என்ற இடத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் - முன்பின் அறிமுகமில்லாத - இரு விமாணங்கள் தாழப் பறந்து வந்ததைப் பொதுமகன் ஒருவர் அவதானித்து, அதுகுறித்து உடனடியாக அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார். ஆனால், அதிகாரிகள் அதுபற்றி அசமந்தத்துடன் இருந்துவிட்டனர்'' - என்றும் ஜனாதிபதி பத்திரிகை ஆசிரியர்களிடம் சொன்னார். (சி)

## புத்தாண்டை ஒட்டி விடுமுறை நாள்களில் கடைகளைத் திறக்க அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 29

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக நிறுவனங்களும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 14ஆம் திகதி வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வியாபாரம் செய்யலாம் என்று யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டும் எனவும் வணிகர் கழகம் அறிவுறுத்தியுள்ளது. (202)

## 'மவ்பிம' பத்திரிகை இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 29

'ஸ்ராண்டட் நியூஸ்பேப்பர்' தனியார் நிறுவனம் வெளியிடுகின்ற 'மவ்பிம', 'சண்டே ஸ்ராண்டட்' ஆகிய இரு பத்திரிகைகளையும் வெளியிடுவதை இந்த நிறுவனம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பத்திரிகை இடைநிறுத்தப்படுவதற்கு நிதிப்பற்றாக்குறையே காரணம் என்று கூறப்படுகிறது.

ஸ்ராண்டட் நியூஸ் பேப்பர் நிறுவனத்தின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாலேயே இந்நிலை ஏற்பட்டது என அந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திலகரட்ண குருவிச்ச பண்டார தெரிவித்துள்ளார்.

## உலகக் கிண்ண கிரிக்கெட்: இன்றைய ஆட்டம்

மேற்கிந்தியத் தீவுகளில் தற்போது நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் ''சுப்பர்- 8'' சுற்று ஆட்டங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன.

**இன்றைய ஆட்டம்**

★மேற்கிந்தியத் தீவுகள் எதிர் நியூசிலாந்து

## பொறுப்புடன் செய்திகளை வெளியிடுமாறு ஊடகங்களுக்கு அமைச்சர் ஆலோசனை

### ஊடக அமைச்சின் கட்டடத்திறப்பு விழாவில்

கொழும்பு, மார்ச் 29

அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குள்ளானபோது அமெரிக்க ஊடகங்கள் பொறுப்புடன் செய்தியை வெளியிட்டன. இதை முன் உதாரணமாகக் கொண்டு எமது நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாதவகையில் எமது ஊடகங்கள் செயற்பட வேண்டும் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா நேற்று தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சின் புதிய கட்டடத்திறப்புவிழா வைபவம் நேற்றுக்காலை நடைபெற்றது. சுமார் 57லட்ச ரூபா செலவில் '163, கிருலப்பன மாவத்தை, கொழும்பு 5' இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள இப்புதிய கட்டடத்தை தகவல் ஊடகத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

ஊடகத்துறை அமைச்சர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட வேண்டும். நாட்டின் பாதுகாப்பில் அரசியல் லாபம் தேடும் வகையிலான செய்திகளை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்த்துக்கொ ள்ள வேண்டும் - என்றார்.

இந்த வைபவத்தில் ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ.எச்.எம்.அஸ்வர் பேசும்போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதன்முறையாக ஊடகவியலாளர்களின் குறைகேள் அதிகாரியொருவரை நியமித்துள்ளார் - என்று தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா உட்

### குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

## கொழும்புத்துறை இளைஞனைக் காணவில்லை

கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த சின்னத்துரை ராஜேந்திரா (வயது-34) என்ற இளைஞரையே காணவில்லை என அவரது தாய் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி காலை 6 மணியளவில் கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற அவர், பின்னர் வீடு திரும்பவே இல்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை-பாரதி வீதி, சங்கானை கிழக்கைச் சேர்ந்த குணசேகரம் குணாகரன் (வயது -20) என்பவர் கடந்த 3ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டவர் அதன் பின்னர் காணாமற் போயுள்ளதாக உறவினர்களால் நேற்று ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-4-8)

## கைதடியில் ஒரே இரவில் ஆறு ஆலயங்களில் திருட்டு

ஒரே இரவில் ஆறு இந்து ஆலயங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி உள்ளனர்.

கைதடிப் பகுதியில் உள்ள ஆலயங்களிலேயே நேற்று முன்தினம் இரவு திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. சம்பந்தப்பட்ட ஆலயங்களில் விக்கிரகங்கள் அகற்றப்பட்டு அங்கிருந்த தங்கத் தகடுகள் திருடப்பட்டுள்ளன. மற்றும் உண்டியல்கள் உட் பட ஆலயங்களிலிருந்த பெறுமதி மிக்க பொருள்கள் யாவும் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## குமுதினி படகுச் சேவை நேற்று முதல் இரு தடவைகள்

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் அரச படகான 'குமுதினி' நேற்று தொடக்கம் காலையிலும் மாலையிலும் போக்குவரத்துச் சேவைகளை நடத்துகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் எஸ். சிவநேசராஜா இதனைத் தெரிவித்தார்.

தற்சமயம் ஒரு தடவையே இந்தப் படகின் சேவை இடம்பெறுவதால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

மக்களின் இந்நிலை குறித்துக் கேட்கப்பட்டபோது பொறியியலாளர் தெரிவித்ததாவது:-

குமுதினிப் படகில் 50 பேர் மட்டுமே பயணஞ்செய்வதற்கு வசதி இருந்தபோதிலும் சில சமயங்களில் ஓரிரண்டு பேரே பயணம் மேற்கொள்வதுண்டு. அதனைக் கருத்திற் கொண்டே படகுச் சேவை ஒன்றாகக் குறைக்கப்பட்டிருந்தது.

ஒரு மாத காலத்துக்கு இரு சேவைகள் பரீட்சார்த்தமாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டு தடவைகளுக்கும் போதிய பயணிகள் சேர்வதைப் பொறுத்து சேவைகள் குறைக்கப்படலாம் - என்று தெரிவித்தார். (அ-1-111)

### சுவாமி பரமானந்தா குருபூசை இன்று

வதிரி, ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் சுவாமி பரமானந்தாவின் 38 ஆவது குருபூசை இன்று ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது. காலையில் அபிஷேகம் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறும். மகேஸ்வர பூசையுடன் நிகழ்வுகள் நிறைவுறும்.

## நாளை

பங்குனி - 16
வெள்ளிக்கிழமை
30.03.2007
திதி: துவாதசி
மாலை : 05.52
நட்சத்திரம்: மகம்
முன்னிரவு : 01.13
சுபநேரம் : 06.13 07.43
ராகுகாலம் : 10.43 - 12.13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற்போனோரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் உறவினர்களும் இந்தப் போராட் டத்தில் கலந்துகொண்டனர்.

காணாமற்போன தமது உறவினர்களைக் கண்டுபிடித்துத் தருவதற்கான உரிய நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று இதில் கலந்துகொண் டவர்கள் கண்ணீர்மல்கக் கேட்டுக் கொண்டனர். (சி)

## தனியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதையும் இந்தியா ஆராய்ந்து வருகிறது.

தனியான ஒரு சம்பவத்தில் கரிசனை காட்டாமல், பிரச்சினையின் மூலகாரணத்தை அகற்றுவதிலேயே கவனம் செலுத்த வேண்டும். தகராறு மேன்மேலும் முற்றி வருகின்றது என்பதே இப்போதைய பிரச்சினை.

இது விடயத்தில் தகராறுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே பிரதானமாகும். தனிப்பட்ட சம்பவம் ஒன்றைக் கையில் எடுத்துக் கொள்வதால், பிரச்சினைக்கான மூலகாரணத்தை நீக்கி விட முடியாது.

வன்செயல்கள் அதிகரிப்பதால் அந்த நாட்டில் பெரும் மனிதாபிமானப் பிரச்சினைகள் பெருகுகின்றன. இது மேலும் கவலையைத் தருகிறது -

இலங்கையில் வன்செயல்கள் அதிகரித்து வரும் விவகாரத்தை இந்தியா அடுத்த வாரம் நடைபெறும் சார்க் மாநாட்டில் கவனத்துக்குக் கொண்டுவரும் - என்றார். (அ)

## கடும் வான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுவீச்சு விமானங்கள் கடுமையான குண்டுத் தாக்கு தலை மேற்கொண்டன.

செங்கலடி - பதுளை வீதியிலுள்ள புலிகளின் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை அண்டியுள்ள பிரதேசங்கள் மீதும் புலிகள் நேற்றுக்காலை ஷெல் தாக்கு தலை மேற்கொண்டுள்ளனர். மக்களின் குடியிருப்புகளை அண்டியுள்ள பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தபோதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

மட்டக்களப்பில் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியான கொடுவாமடு பகுதிக்குள், இராணுவத்தினரும் துணை இராணுவக் குழுக்களும் ஊடுருவ எடுத்த முயற்சியைப் புலிகள் முறியடித்துள்ளனர் என இணைத்தள தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம் பெற்ற இந்தத் தாக்குதலைப் புலிகள் முறியடித்துள்ளனர் எனவும், இதன்போது துணைக்குழுவைச் சேர்ந்தவர்களில் இருவரது சடலங்களைத் தாம் கண்டெடுத்தனர் எனவும் அத்துடன் ரி-56 ரக துப்பாக்கிகள் 08 உட்பட பல ஆயுதங்களைக் கைப்பற்றினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் காயமடைந்த நால்வர் செங்கலடி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## எட்டு இடங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன. அங்கு அவற்றின் பரீட்சார்த்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கமாண்டர் ஒருவரின் தலைமையில் 50 விமானப்படை வீரர்கள் அடங்கிய குழு ஒன்று ஆகாயப் பிராந்தியத்தைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றது என்று பெயரை வெளியிட விரும் பாத விமானப்படை அதிகாரி ஒருவர் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். இதேவேளை, சீனியப்பாதர்கா பகுதியில் நிரந்தர விமானப் படைத் தளம் ஒன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் அரசவிமானப்படைத்தளம் ஒன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் விமானத்தாக்குதல் நடத்திய இரு தினங்களில் இவ்வாறு ராடர் கருவிகளைப் பொருத் துவது என்ற முடிவு எடுக்கப்பட்டிருப் பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தமிழகத்துக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் கடலோரப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

**மிதக்கும் பொலிஸ் நிலையங்கள்**

சந்தேகத்திற்கு உரியவர்களிடம் விசாரணை நடத்துகின்றனர். படகுகள் மூலம் ஆயுதங்கள் , வெடிபொருள்கள் விடுதலைப் புலிகளுக்கு கடத்தப்படுகின்றனவா என்பதையும் அவர்கள் கண்காணித்து வருகின்றனர்.

விசேட படைப்பிரிவுகளுக்கு மேலதிகமாக இராமநாதபுரம் முதல் கன்னியாகுமரி வரையான கடற்பகுதியில் ஐந்து மிதக்கும் பொலிஸ் நிலையங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை விரைவில் செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

## மட்டு. செங்கலடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்று ஈ.பி.டி.பி. இயக்க உறுப்பினர்களினதும் இரண்டு பொதுமக்களினதும் சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து செங்கலடி பிரதான வீதி தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றும் மூடப்பட்டிருந்தது. இதனால் வாழைச்சேனைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான வாகனப் போக்குவரத்துகள் உள்வீதிகள் ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம் பெற்றன.

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவத்தினால் சேதமடைந்த மின்கம்பங்கள் மற்றும் மின் கம்பிகள் என்பன திருத்தம் செய்யப்பட்டுத் தற்போது மின் விநியோகம் வழமைபோன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (சி)

## ராடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''அது சரியாகச் செயற்படவில்லை என்ற கேள்விக்கே இடமில்லை '' என்று ஒரு வசனத்தில் பதிலளித்தார். (அ)

## கிழக்கில் புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள நான்கு முகாம்களை நோக்கி விடுதலைப் புலிகள் கடந்த வாரம் எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டனர். கொம்மாதுறை படைமுகாம்மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டிருக்கின்றனர்.

புலிகளின் இவ்வாறான தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் இராணுவத்தினர் முன்னேற்ற நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட படைமுகாம்களில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி கடுமையான எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (சி)

## வான் புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து வலியுறுத்தி, பிரசாரப்படுத்தி, முக்கிய முடிவுகளையும், நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டிய தளம், இப்பிராந்தியத்துக்கான 'சார்க்' மாநாடுதான் என்றும் கருதுகின்றது.

எனவே வான் புலிகளின் தாக்குதலை அடுத்து, நடைபெறவுள்ள இந்தப் பிராந்திய மாநாட்டை சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ள கொழும்பு அரசுத் தலைமை திட்டமிடுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளியுறவுச் செயலாளர்கள், வெளியுறவு அமைச்சர்கள், நாட்டின் தலைவர்கள் பங்குபற்றும் கூட்டங்களுக்குப் புறம்பாக இராஜதந்திர மட்டத்தில் இவ்விடயத்தை பிரசாரப்படுத்தி, இவ்விடயத்தில் இலங்கை அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவான கருத்து இணக்கம் ஒன்றை 'சார்க்' அளவில் உருவாக்கவும் கொழும்பு முயற்சிக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

இவ்விடயத்தில் 'சார்க்' நாடுகள் மத்தியில் கூட்டு இணக்கப்பாட்டை உருவாக்க முடிந்தால் இந்த 'சார்க்' மாநாட்டை இலங்கைக்கு பெரு வெற்றியாகக் கொள்ளலாம் என்றும் அரசுத் தலைமை தனது அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகக் கூறப்பட்டது. (சி)


## குருபூசையும் ஆண்டு நிறைவு விழாவும்

வதிரி ஸ்ரீ பரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் சுவாமி பரமானந்தா அவர்களின் 123 ஆவது குருபூசையும் ஆச்சிரமத்தின் 38 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இன்று (29.03.2007) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு அபிசேகமும் பூசை வழிபாடும் ஆரம்பமாகும். பகல் மகேஸ்வர பூசை நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வதிரி, கரவெட்டி. (சி-50885) தர்மகர்த்தாக்கள் சபை.

## கண்ணீர் அஞ்சலி

27.03.2007 அன்று இறைபதமடைந்த யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி கிறிஸ்தவ ஆசிரியர்

### திருமதி லி. பசில் ராஜ்குமார்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-50884)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், சிற்றூழியர்கள்,
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

### சிவக்கொழுந்து சிவசுந்தரம்

கடந்த 27.02.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.03.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து [நடை]பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

47, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி-50887) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### துரைரெட்ணம் சந்திரநாத் (சந்துரு)

(பழைய மாணவன், பரியோவான் கல்லூரி, 2002 விஞ்ஞானப்பிரிவு)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த துரைரெட்ணம் சந்திரநாத் (சந்துரு) 27.03.2007 அன்று அகாலமரணமானார்.

அன்னார் இ.துரைரெட்ணம் (கணக்கர்) திருமதி இராஜேஸ்வரி துரைரெட்ணம் (முன்னாள் அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி) தம்பதியரின் அன்பு மகனும் பொன்னரசி (ஆசிரியை, யா/ புனித சாள்ஸ் ம.வி.), திருமதி மலரரசி, காலஞ்சென்ற ரகுநாத் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2007) வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது சொந்த ஊரான வேம்படி, வல்வெட்டித்துறையிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வேம்படி,
வல்வெட்டித்துறை. திருமதி துரைரெட்ணம் (தாய்).

## தேவை

வீட்டுப் பாவனையில் உள்ள தொலைபேசி SLT, அல்லது சன்ரெல் தேவை.

தொடர்பு :- 0776125789

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி பொன்னரசி துரைரெட்ணம்
அவர்களின் அன்புச் சகோதரன்

### துரைரெட்ணம் சந்திரநாத்

அவர்களின் அகாலமரணத்தினால் அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்திருக்கும் ஆசிரியை அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/ புனித சாள்ஸ் ம.வி., யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### நாகன் கதிர்காமு



உரும்பிராயைச் சேர்ந்த நாகன் கதிர்காமு (ஓய்வுபெற்ற கண்காணி, யாழ்.மாநகரசபை) நேற்று (28.03.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன்-சின்னன் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பூபாலன், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலமணியின் அன்புக் கணவரும் நவரத்தினராசா (யாழ். மாநகரசபை), குலசேகரம் (யாழ்.மாநகரசபை), காலஞ்சென்ற கிருஸ்ணராஜா (ஹொலண்ட்) மற்றும் தவமலர், இந்திராணி, சாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணரத்தினதேவி, ரேணுகாதேவி, குணரத்தினராசா (யாழ். மாநகரசபை), குணரத்தினம் (யாழ். மாநகர சபைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்), கதிரேசு (சுன்னாகம் பிரதேச சபை) ஆகியோரின் மாமனும் மயூரன், காஞ்சனா, அபிராமி, மகிந்தன், ரேகா, சுரேந்தினி, ரேவதி, செந்தூரன், சத்தியா, சந்திரன், கிருபாகரன், சதீஸ், கிரிராஜ், பிரியா, கிரியா, டினேஸ், டயானா, நிலா ஆகியோரின் பாசமிகு பேரனும் விஜானி, லியானியா, ஹரிபிரசாத் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2007) வியாழக்கிழமை காலை 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்படி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வைத்தீஸ்வரா வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (59149) மகன்மார்.

### நாகநாதர் இளையதம்பி குமாரசுவாமி

தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நாகநாதர் இளையதம்பி குமாரசுவாமி 26.03.2007 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னாபரணம் அவர்களின் அன்புக் கணவரும் ஸ்ரீ யோகநாதன் (கொழும்பு), ராஜராஜேஸ்வரி (நோர்வே), சௌபாக்கியவதி (கனடா), ஸ்ரீசரவணபவான் (கனடா), ஸ்ரீ சற்குருநாதன் (கனடா), தேவிகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஜனி (கொழும்பு), சகாதேவன் (நோர்வே), செல்வநாயகம் (கனடா), மஞ்சுளா (கனடா), ஸ்ரீ ரங்கநாயகி (கனடா), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2007) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறுமென அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீயோகநாதன் (மகன்).
தொ.பே.: 2508639

### திருமதி பசில் ராஜ்குமார் யூலியற்ராணி (செல்வமகள்)

[ஆசிரியை - பருத்தித்துறை புற்றளை ம.வி, வட மத்திய மகளிர் கல்லூரி, முன்னாள் ஆசிரியை, பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை, பரு.கலட்டி, றோ.க.ஆண்கள் பாடசாலை, திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை]



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ப.யூலியற்ராணி (செல்வமகள்) நேற்று (28.03.2007) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பி.பசில் ராஜ்குமாரின் (பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், யாழ்.) அன்பு மனைவியும் ப.பியன் றோனின் (பரு/புற்றளை ம.வி.) அன்புத் தாயும் காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் ஆரோக்கியம் தம்பதியரின் செல்வப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான பிரகாசம் - பிரகாசி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தே.அ.யோசப் (தபாலதிபர்), சி.அமிர்தநாதன் (ஆசிரியர்), சி.ஜோர்ஜ் அன்ரனி (திருமலை), சி.யோசப் கொன் விக்ரர் (பரு.ப.தெ.வ.கூ.ச), சி.றொ.வேதநாயகம் (சுவீடன்), திருமதி மேரி கரோலின் (பின்லாந்து), சி.றெஜினோல்ட் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி லூர்தம்மா, திருமதி அந்தோனியம்மா, திருமதி கொலஸ் ரிக்கா புஸ்பவதி (திருமலை), திருமதி மேரி கலைச்செல்வி, திருமதி தங்கராணி (சுவீடன்), மோகனதாஸ் (பின்லாந்து), திருமதி ஜெனிற்றா றில்வியா, ஆரோக்கியம்மா, ஆரோக்கியநாதன், அந்தோனியம்மா, அமலோற்பவநாயகி, அன்ரனி (கொழும்பு), சூசைப்பிள்ளை (லண்டன்), கில்டா ஆகியோரின் அன்பு மைத்துனியும் அன்ரன் ராஜசேகரன், ராஜேந்திரகுமார் (லண்டன்), ஆன் இலங்கா தேவி (கனடா), டொறின், ஜெறின், மெல்டின், டிலக்ஸினி, டிவேந்தினி, கமிலஸ், நிரோசினி, டிலக்ஸன், துஸ்யந், தர்சினி, டிவ்வியந் (சுவீடன்), மிசேலா, றுஸ்லன் (பின்லாந்து), சிமிரா (நோர்வே), பெனடிற் (நோர்வே), டொறின் (லண்டன்), ஜீவராசா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ((29.03.2007) வியாழக்கிழமை பி.ப. 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்ட பின் நல்லடக்கத்திற்காக கோரியடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புனித அந்தோனியார் ஒழுங்கை,
பருத்தித்துறை. (சி.50889)
பி.பசில் ராஜ்குமார் [கணவர்],
சி.ஜோ.கொன்விக்ரர் [அண்ணன், குணம்].


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org